# இந்தி மயமானது வானிலை மையம்!

## டிஜிட்டல் உலகின் வழியாக நுழையும் புதிய ஆபத்து!

சென்னை, ஏப்.27-

**ஒரு மொழியைக் அழிப்பதற்கு வாளோ, துப்பாக்கியோ தேவையில்லை. ஒரு இணையதளத்தின் முகப்பு பக்கத்தை மாற்றினால் போதும். ஒரு அரசாணையின் ஒரே வரியில் லட்சக்கணக்கான மனித உரிமைகள் மவுனமாக மரணிக்கின்றன.**

இந்தியாவின் மிகப் பழமையான அறிவியல்நிறுவனங்களில்ஒன்றான இந்திய வானிலை ஆய்வு மையம். அதாவது ஐ.எம்.டி, தனது அதிகாரப் பூர்வ இணையதளமான mausam.imd.gov.inன் முதன்மை மொழியை, நெடுங்காலமாக இருந்த ஆங்கிலத்திலிருந்து திடீரென இந்தியாக மாற்றியுள்ளது. இது ஒரு தொழில்நுட்ப மாற்றம் மட்டுமல்ல. இது ஒரு அரசியல் திட்டமிடலின் நடைமுறை வெளிப்பாடு.

### வானிலை அறிவிப்பு என்பது வாழ்வின் கேள்வி

இந்திய வானிலை ஆய்வு மையம் 1875 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. புயல் எச்சரிக்கைகள், கனமழை அறிவிப்புகள், வெப்ப அலை உயிரிழப்பு முன்னறிவிப்புகள், விவசாயிகளுக்கான பருவமழை கணிப்புகள், கடல் மீனவர்களுக்கான கடல் நிலை அறிக்கைகள். இவை யாவும் இந்த மையத்தின் இணையதளத்தை நம்பியே நிகழ்கின்றன.

ஒரு விவசாயி நாற்று நட வேண்டுமா?வேண்டாமா? என்று முடிவெடுப்பது இந்த இணையதளத்தைப் பார்த்தே. ஒரு மீனவர் கடலுக்குள் செல்லலாமா? வேண்டாமா? என்று தெரிந்து கொள்வதும் இதையே பார்த்தே.

இப்படி உயிர்களோடு நேரடியாக பிணைந்த ஒரு இணையதளத்தின் முகப்பு பக்கம் இப்போது இந்தியில் காட்சி தருகிறது.

தமிழகத்திலோ,கேரளத்திலோ, வங்காளத்திலோ உள்ள ஒரு சாமான்யன்அந்தஇணையதளத்தை திறக்கும்போது, அவன் முதலில் காண்பது தன் மொழியில் அல்ல இந்தியில். உள்ளே நுழைந்த பிறகே ஆங்கிலத்திற்கு மாற்றிக் கொள்ளும் வசதி உண்டு என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த "உள்ளே நுழை" என்றஒருதடை,ஒருசாமான்யனுக்கு எவ்வளவு பெரிய தடையாக மாறும் என்பதை அவர்களுக்கு யார் புரிய வைப்பது?




### இந்தி திணிப்பின் புதிய முகம்

இந்தி திணிப்பு என்பது புதிதல்ல. ஆனால் இன்று அது டிஜிட்டல் உலகின் வழியாக நுழைகிறது என்பதே புதிய ஆபத்து. ஒரு தலைவர் மேடையில் நின்று "இந்தி பேசுங்கள்" என்று கோஷமிட்டால் மக்கள் எதிர்க்கலாம். ஆனால் ஒரு இணையதளத்தின் மொழி அமைப்பை மாற்றும்போது, அது தெரியாமலே நடக்கிறது. இந்த மாற்றம் மெல்ல மெல்ல நம் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகி விடுகிறது.

ஒன்றிய பாஜக அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல், இந்தி மயமாக்கல் என்பது திட்டமிட்ட முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரயில்வே அறிவிப்புகள், தபால் துறை ஆவணங்கள், ஒன்றிய அரசு சேவை இணையதளங்கள் என ஒவ்வொன்றாக இந்தி தன்னை நிலைநிறுத்திக் கொண்டே போகிறது. இப்போது இந்திய வானிலை ஆய்வு மையமும் அந்த வரிசையில் இணைந்துள்ளது.

### அரசமைப்பு சொல்வது என்ன?

இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தியை ஒன்றியத்தின் அதிகாரப் பூர்வ மொழியாக ஏற்றுக்கொண்டாலும், "ஆட்சி மொழியாக இந்தி மட்டுமே" என்று சட்டம் எங்கும் சொல்ல வில்லை.

மேலும், ஒன்றிய அரசின் அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் 1963 ஆங்கிலத்தையும் இணை மொழியாக தக்க வைத்திருக்கிறது. இந்நிலையில், ஒரு ஒன்றிய அரசு நிறுவனம் முதன்மை மொழியாக ஆங்கிலத்தை விலக்கி இந்தியை நிறுவுவது அரசமைப்பின் உள்ளார்ந்த நீதிக்கே சவால் விடுவதாகும்.

தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கை நடைமுறையில் இருக்கிறது. தமிழும் ஆங்கிலமும். இந்தி இங்கு அதிகாரப்பூர்வ மொழியே அல்ல. அப்படியிருக்க, ஒரு ஒன்றிய அரசு சேவையின் முகப்பு பக்கம் இந்தியில் தோன்றுவது, தமிழக மக்களுக்கு மிகத் தெளிவான ஒரு செய்தியை அனுப்புகிறது. "நீங்கள் இந்தி கற்றுக் கொள்ளுங்கள்; இல்லையென்றால் ஓரங்கட்டப்படு வீர்கள்."

### இந்தி பேசா மாநிலங்களுக்கு இது என்ன செய்யும்?

தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரா, தெலுங்கானா, மேற்கு வங்காளம் இந்த மாநிலங்களில் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்கு இந்தி அன்னிய மொழி. அவர்கள் வாழ்நாளில் கற்றதில்லை, கற்க வேண்டிய கட்டாயமும் இல்லை.

இந்நிலையில், ஒரு கடற்கரை மீனவர் கடலின் நிலையை அறிய வானிலை இணையதளத்தை திறக்கும்போது, முதலில் இந்தியில் ஒரு பக்கம் தோன்றுகிறது. அவர் படித்தவராக இருந்தாலும் இந்தி தெரியாவிட்டால்அந்நொடிதிகைப்பில் நிற்கிறார். படிக்காதவராக இருந்தால் கேட்கவே வேண்டாம்.

வானிலை தகவல் என்பது ஒரு அலட்சியமான விஷயமல்ல. ஒகி புயல் தாக்கியபோது உயிரிழந்த மீனவர்களை நினைத்துப் பாருங்கள். சரியான நேரத்தில் சரியான மொழியில் தகவல் கிடைத்திருந்தால் எத்தனை உயிர்கள் காப்பாற்றப் பட்டிருக்கும்? மொழி என்பது வெறும் பண்பாட்டு அடையாளம் மட்டுமல்ல.அது ஒரு உயிர் காக்கும் கருவியும் கூட.

### இது தனிச் சம்பவமல்ல

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் இந்த மாற்றம் திடீரென நிகழ்ந்த ஒன்றல்ல. இது ஒரு நீண்ட சங்கிலியின் இன்னொரு கண்ணி மட்டுமே. கடந்த சில ஆண்டுகளாக ஒன்றிய பாஜக அரசின் பல்வேறு துறைகளில் ஆவணங்கள், சுற்றறிக்கைகள், அறிவிப்புகள் ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாற்றப்பட்டு வருகின்றன. நாடாளுமன்றத்தில் ஆங்கிலத்தில் கேள்வி கேட்பவர்களுக்கு இந்தியில் பதில் வருகிறது. கல்விக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் என அனைத்திலும் இந்தி ஆதிக்கம் கொஞ்சம் கொஞ்சமாக விரிகிறது.

**இந்தத் திட்டமிட்ட மொழி ஆக்கிரமிப்பிற்கு எதிராக தமிழர்கள் போராடியது புதிதல்ல. 1937ஆம் ஆண்டிலும், 1965ஆம் ஆண்டிலும் இரத்தம் சிந்தி, உயிரை மாய்த்துக் கொண்டு தமிழர்கள் இந்தி திணிப்பை தோற்கடித்தனர். அந்த வரலாற்று தியாகங்களின் நினைவை மனதில் கொண்டு, இன்றைய டிஜிட்டல் திணிப்பையும் நாம் தீவிரமாக எதிர்க்க வேண்டிய கட்டாயம் உள்ளது.**

### இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?

இந்த விஷயத்தில் வெறும் கோபம் மட்டும் போதாது. விழிப்புணர்வும், ஒன்றிணைந்த குரலும் தேவை. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் இணையதளத்தை உடனடியாக பன்மொழி வடிவில், முகப்பிலேயே அனைத்து மாநில மொழிகளிலும் மாற்றியமைக்க வேண்டும் என்று தமிழக அரசும், பிற இந்தி பேசா மாநில அரசுகளும் ஒன்றிணைந்து கோரிக்கை வைக்க வேண்டும்.

**ஒரு மரம் வேரிலிருந்து அறுபட்டால் பூக்காது; ஒரு மொழி தன் மண்ணிலிருந்து அகற்றப்பட்டால் வளராது. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் இணையதளம் இந்தி மயமானது சிறிய செய்தியாகத் தோன்றலாம். ஆனால் நூறு சிறிய நீரோடைகள் சேர்ந்தே பெரும் வெள்ளமாகும் என்பதை வரலாறு நமக்குச் சொல்லியிருக்கிறது.**

**தமிழன் விழிப்புடன் இருக்க வேண்டும். ஒவ்வொரு டிஜிட்டல் மாற்றத்தையும், ஒவ்வொரு அரசாணையையும், ஒவ்வொரு இணையதளத்தின் மொழி மாற்றத்தையும் கண்காணிக்க வேண்டும்.**


ஏனெனில் இன்று வானிலை மையம், நாளை வேறு ஒன்று, நாளைக்கு மறுநாள் இன்னொன்று இப்படி மெல்ல மெல்ல நம் வாழ்வின் அனைத்து அலுவல் இடங்களிலும் இந்தி புகுந்து விட்டால், அப்போது நாம் போராடினாலும் மிகத் தாமதமாகிவிட்டிருக்கும்.

**மொழி என்பது மனிதனின் ஆன்மா. அந்த ஆன்மாவைக் காக்கும் போராட்டம் இன்று, இப்போது, இங்கே தொடங்க வேண்டும்.**

# அவரே தொடர்கிறார்!

**மனச்சாட்சிய**
**தொட்டுச் சொல்லுங்க ..**

அவர்
அளவுக்கு
ஓடி ஓடி
உழைச்சீங்களா…



அவர் அளவுக்கு
உரிமைகளை
காக்க
போராடுனீங்களா..

அவர் அளவுக்கு
கட்சியை கட்டுக்கோப்பா
ஒற்றுமையா
வச்சுக்கிட்டீங்களா…

அவர் அளவுக்கு
கூட்டணிய
பலமாக
கட்டுனீங்களா…

அவர்
அளவுக்கு
SIR பணிகளில்
கட்சியினரை
இறக்கீனீங்களா…

அவர் அளவுக்கு
திசையெட்டும்
திரும்பிப் பார்க்கும்
திட்டங்களை
கொடுத்தீங்களா .

அவர் அளவுக்கு
களத்துல
கண்ணியமா
பிரச்சாரம்
செஞ்சீங்களா ..

அவர் அளவுக்கு
தேர்தல் அறிக்கையில
மக்களுக்கு நம்பிக்கை
கொடுத்தீங்களா…

அவர் அளவுக்கு
யாராவது இப்பவரை
தேர்தல் முடிவுகளில்
மொதல்ல
நம்பிக்கையா
இருக்கீங்களா. .

அடப்
போங்க பாஸ்

Low risk low gain

High risk high gain

No risk no gain…

போங்க
போய் வேலைய
பாருங்க…

ஆரூரின்
தேர் அழகாய்
அவரே
தொடர்கிறார்…

**அம்புட்டுத்தான்…**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

## கோவை, ஈரோடு, சேலம்,

# தருமபுரியில் ஏப்.30, மே 1ல் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஏப்.27-

தமிழகத்தில் கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் ஏப்.30, மே 1 தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வடக்கு உள் கர்நாடகா முதல் குமரிக்கடல் வரை தெற்கு உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் நாளை (ஏப்.26) ஒரிரு இடங்களிலும், 27ம் தேதி மேற்கூறிய இடங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 28, 29 தேதிகளில் நீலகிரி, கோவை, திருப்பூர் மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

30ம் தேதி கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களில், மே 1ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமானது முதல் கன மழையும், இதர தமிழக பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் 29ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒரு சில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## குழந்தைகள் கொல்லப்பட்டதற்கு நீதி கேட்டு

# மணிப்பூர் பா.ஜ.க. முதல்வர் வீடு முற்றுகை!

## போராட்டக்காரர்கள் – காவல்துறையினர் மோதல்!

இம்பால், ஏப். 27-

மணிப்பூரில் 2 குழந்தைகள் கொல்லப்பட்டதற்கு நீதி கேட்டு முதல்வர் இல்லத்தை போராட்டக்காரர்கள் முற்றுகையிட முயன்றனர். அவர்களை காவல்துறையினர் தடுத்து நிறுத்தியதால் மோதல் ஏற்பட்டது. மணிப்பூரில் கடந்த 2023 மே மாதம் மெய்டீஸ், குக்கி சோ, நாகா சமூகத்தினரிடையே ஏற்பட்ட இன மோதலில் 260க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 2 ஆண்டுகள் வன்முறை சம்பவங்கள் நீடித்து வந்த நிலையில் பாஜவை சேர்ந்த முதல்வர் என்.பிரேன் சிங் பதவியை ராஜினாமா செய்தார். தொடர்ந்து அங்கு குடியரசு தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

வன்முறைகள் குறைந்து வந்த நிலையில், குடியரசு தலைவர் ஆட்சி அகற்றப்பட்டு மெய்டீஸ் இனத்தை சேர்ந்த ஒய். யும்னம் கெம் சந்த் சிங் மணிப்பூர் முதல்வராக கடந்த பிப்ரவரி மாதம் பதவி ஏற்றார். மாநிலத்தில் அமைதியை மீட்டெடுக்கும் முயற்சியில் முதல்வர் கெம் சந்த் சிங் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இந்த சூழலில் இங்குள்ள பிஷ்ணுபூர் மாவட்டத்தில் மொய்ராங் ட்ராங்லாபி பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது கடந்த 7ம் தேதி மர்ம நபர்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் வீட்டில் தூங்கி கொண்டிருந்த 5 வயது சிறுவனும், அவரது சகோதரியும்(6 மாத குழந்தை) கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தை கண்டித்தும், குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய வலியுறுத்தியும் பல்வேறு அமைப்புகள் சார்பில் தொடர் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

அதன்ஒரு பகுதியாக நேற்று 2 குழந்தைகள் கொல்லப்பட்டதற்கு நீதி கேட்டும், மாநிலத்துக்குள்ளேயே அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு மறுவாழ்வு கோரியும், மணிப்பூரில் நிரந்தர அமைதியை நிலைநாட்டவும் வலியுறுத்தி மெய்டீஸ் இனத்தின் மணிப்பூர் ஒருமைப்பாட்டுக்கான ஒருங்கிணைப்பு குழு சார்பில் பேரணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த பேரணியில் ஆயிரக்கணக்கான மெய்டீஸ் இனத்தவர்கள் கலந்து கொண்டனர். நான்கு வெவ்வேறு இடங்களில் இருந்து சென்ற போராட்டக்காரர்கள் முதல்வர் இல்லம் நோக்கி பேரணியாக சென்றனர்.

இதையடுத்து இம்பாலின் மையப்பகுதியில் உள்ள கெய்சம்பட் சந்திப்பு, காங்லா கேட், கோனுங் மாமாங் மற்றும் மொய்ராங்கோம் ஆகிய முதல்வர் இல்லத்துக்கு செல்லும் நான்கு திசைகளிலும் கூடுதல் பாதுகாப்பு படைகள் நிறுத்தப்பட்டு, தடுப்புகள் அமைக்கப்பட்டன. அப்போது இம்பால் கிழக்கில் உள்ள குரைலாம் லாகில், முதல்வர் இல்லத்திலிருந்து 2 கிமீ தூரத்தில் உள்ள பகுதியில் வைக்கப்பட்டிருந்த தடுப்புகளை போராட்டக்காரர்கள் உடைக்க முயன்றனர். இதையடுத்து பாதுகாப்பு படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசி அவர்களை கலைத்தனர்.

## மே 4 இல் கத்திரி வெயில் ஆரம்பம்

# சேலத்தில் 101 டிகிரியை தாண்டிய வெயில்!

## வாகனப் போக்குவரத்து குறைந்தது!

சேலம், ஏப். 27-

அக்னி நட்சத்திரம் எனும் கத்தரி வெயில் வருகிற மே மாதம் 4 ந்தேதி தான் தொடங்குகிறது. ஆனால் அதற்கு முன்பே தற்போது அனைத்து பகுதிகளிலும் கடந்த சில வாரங்களாக கோடை காலம் தொடங்கி வெயில் சுட்டெரித்து வருகிறது. கடும் வெயில் அடித்து வருவதால் நீர்நிலை வேகமாக வறண்டு வருகின்றன. மேலும் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக சரிந்து வருவதால் சேலம் மாவட்டம் முழுவதும் விவசாய பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மதிய வேளைகளில் அனல் காற்று வீசுவதால் ஏற்படும் புழுக்கத்தால் பொதுமக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகின்றனர். இதன் காரணமாக சேலம் நகரின் முக்கிய சாலைகளான ஓமலூர் மெயின் ரோடு, திருச்சி மெயின் ரோடு, சாரதா கல்லூரி ரோடு, 4 ரோடு, 5 ரோடு, புதிய பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் வாகன போக்குவரத்து குறைந்த அளவிலே தான் இருந்தது. சாலைகளில் பொதுமக்கள் நடமாட்டம் குறைந்து வெறிச்சோடி காணப்பட்டது.

வேலை விஷயமாக வெளியே சென்று வீடு திரும்பும் பொதுமக்கள், முதியோர், பெண்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க மோர், கம்மங்கூழ், தர்பூசணி, இளநீர், லெமன் ஜூஸ், முலாம் பழ ஜூஸ், வெள்ளரிப்பழ ஜூஸ், . சாத்துக்குடி ஜூஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான ஜூஸ் வகைகளை வாங்கி அருந்தி மக்கள் தங்களின் தாகம் தீர்த்து வருகின்றனர். இதனால் பழக்கடை, ஜூஸ் கடைகளில் தினமும் கூட்டம் அலைமோதுகிறது.

சேலம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 102.7 டிகிரி பாரன்ஹீட் வெயில் பதிவானது. நேற்று 101.5 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலை பதிவாகியுள்ளது. வரும் நாட்களில் வெப்பநிலை மேலும் அதிகரிக்கக் கூடும் என்பதால் பொதுமக்கள் கலக்கத்தில் உள்ளனர்.

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு - அதிபர் டிரம்ப் உயிர் தப்பினார்!

வாஷிங்டன், ஏப். 27-

அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள வாஷிங்டன் ஹில்டன் ஓட்டலில் 25ஆம தேதி நள்ளிரவில் வெள்ளை மாளிகை பத்திரிகையாளர்கள் சங்கத்தின் இரவு விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது திடீரென அங்கு துப்பாக்கிசூடு நடத்தப்பட்டது. இதனால் உடனடியாக அங்கிருந்து அதிபர் டிரம்ப் மற்றும் அவரது மனைவி மெலானியா டிரம்ப் ஆகியோர் வெளியேற்றப்பட்டனர்.

வருடாந்திர ஊடக நிகழ்வுக்கு முன்னதாக, டிரம்பும், மெலானியாவும் அமர்ந்திருந்த ஓட்டல் விருந்தினர் மாளிகைக்கு வெளியே துப்பாக்கிசூடு சத்தம் கேட்டதைத் தொடர்ந்து, அங்கு பதற்றமான சூழல் நிலவியது.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, அமெரிக்க அதிபர் டிரம்ப் அமெரிக்காவின் ரகசிய சேவை மற்றும் உள்ளூர் பாதுகாப்பு அதிகாரிகளை பாராட்டினார். இது தொடர்பாக அவர் தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் வெளியிட்ட ஒரு பதிவில், “துப்பாக்கிசூடு நடத்தியவர். கைது செய்யப்பட்டுள்ளார், மேலும் ‘நிகழ்ச்சியைத் தொடரலாம்’ என்று நான் பரிந்துரைத்துள்ளேன், ஆனால் அது முற்றிலும் பாதுகாப்பு துறை அதிகாரிகளின் வழிகாட்டுதலின்படியே நடக்கும், அவர்கள் விரைவில் ஒரு முடிவை எடுப்பார்கள். அந்த முடிவை பொருட்படுத்தாமல், இந்த மாலை பொழுது திட்டமிட்டதை விட மிகவும் வித்தியாசமாக இருக்கும், மேலும் நாம் இதை மீண்டும் செய்ய வேண்டியிருக்கும்” என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக துப்பாக்கி சத்தம் கேட்ட பிறகு, “கீழே படுங்கள்!” மற்றும் “கீழேயே இருங்கள்!” என்று மக்கள் கத்த, சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட காணொளி காட்சிகளில் டிரம்பும் பங்கேற்பாளர்களும் தங்கள் மேசைக்கு பின்னால் பதுங்கி கொண்டனர்.

பின்னர், ரகசிய சேவை முகவர்களால் டிரம்ப் சம்பவ இடத்திலிருந்து அவசரமாக அழைத்து செல்லப்பட்டார், அதை தொடர்ந்து கனரக ஆயுதம் ஏந்திய பாதுகாப்பு போலீசார் மேஜையை சூழ்ந்து கொண்டனர். பின்னர் வெள்ளை மாளிகை செய்தியாளர் சங்கத்தின் தலைவரான வெய்ஜியா ஜியாங், நிகழ்ச்சி மீண்டும் தொடங்கும் என்றும், கூடுதல் விவரங்கள் விரைவில் வழங்கப்படும் என்றும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தின் போது உடனடியாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தகவல் வெளியாகி உள்ளது. இதன்படி ஜனாதிபதி டிரம்ப் மற்றும் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் ஆகிய இருவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று அசோசியேட்டட் பிரஸ் வட்டாரம் தெரிவித்தது. வெள்ளை மாளிகை செய்தியாளர்களின் இரவு விருந்தின்போது நடந்ததாக கூறப்படும் துப்பாக்கிசூடு சம்பவம் தொடர்பாக, சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## தனி நபர் சராசரி ஜி.டி.பி.

# இந்தியாவை மீண்டும் வங்கதேசம் முந்தியது!

புதுடெல்லி, ஏப்.27-

2026ஆம் ஆண்டு தனி நபர் சராசரி ஜிடிபி கணக்கீடில் வங்க தேசம் இந்தியாவை முந்தும் என சர்வதேச நிதி நாணயம் (IMF) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வங்கதேசத்தின் தனி நபர் ஜிடிபி 2,911 அமெரிக்க டாலராகவும் இந்தியாவின் தனி நபர் ஜிடிபி 2812 அமெரிக்க டாலராகவும் இருக்கும் என சர்வதேச நிதி நாணயம் மதிப்பிட்டுள்ளது.

2023 மற்றும் 2024 ஆண்டுகளிலும் வங்க தேசத்தின் தனி நபர் ஜிடிபி இந்தியாவை விட அதிகமாகவே இருந்தது. 2025ஆம் ஆண்டு இந்தியா முந்தியது. ஆனால் 2026இல் மீண்டும் வங்கதேசம் முந்தியுள்ளது.

எனினும்அமெரிக்காவை போல வல்லரசாக இந்தியாவை மாற்றுவோம்எனும் நமது விஸ்வகுருவின் (பிரதமர் மோடி) சபதம் புஸ்வாணமாகிவிட்டது. நம்மைவிட தொழில் உற்பத்தியில் பின் தங்கியுள்ள வங்கதேசத்துடன் போட்டி போடும் அளவுக்கு இந்தியா பின் தங்கிவிட்டது என்பது விஸ்வகுருவின் தோல்வியை படம் பிடித்து காட்டுகிறது. 12 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த பின்னரும் இந்தியாவின் பொருளாதாரத்தை எப்படி வழி நடத்தி முன்னேற்றுவது என்பது பா.ஜ.க. அரசுக்கு தெரியவில்லை என்றே ஆய்வா ளர்கள் கருதுகின்றனர்